கிளைநுதற்பெயராவன உறவுப்பொருளுணர்த்தி வரும் தமன், தமள், தமர்; நமன், நமள், நமர்; நுமன், நுமள், நுமர்; எமன், எமள், எமர்; தம்மான், தம்மாள், தம்மார்; நம்மான், நம்மாள், நம்மார்; நும்மான், நும்மாள், நும்மார்; எம்மான், எம்மாள், எம்மார் எனவரும். வெற்பன், பொருப்பன் எனவரும் ஒட்டுப் பெயர்கள் வெற்பு+அன், பொருப்பு+அன் எனப் பிரிக்குமிடத்து முதனிலையும் இறுதிநிலையுமாகப் பிரிந்துநின்று தம்பொருளுணர்த்துமாறு போன்று கிளைநுதற் பெயராகிய இவை, தம்+அன், எம்+அன் எனப் பிரிப்புழிப் பொருள் உணர்த்தாமையால் 'பிரிப்பப் பிரியா' என்றார்.

சகக. இசைநிறை யசைநிலை பொருளொடு புணர்தலென்
றவைமூன் றென்ப வொருசொல் லடுக்கே.

இஃது ஒரு சொல்லடுக்காவன இத்துணைய என்கின்றது.

(இ-ள்) இசைநிறையும் அசைநிலையும் பொருள்வேறுபாட்டொடு புணர்வதும் என ஒரு சொல்லடுக்கு அம்மூன்று வகைப்படும். எ-று.

(உ-ம்.) 'ஏ ஏ ஏ ஏ யம்பல் மொழிந்தனள்' என்பது இசைநிறை. மற்றோ மற்றோ; அன்றே அன்றே என்பன அசைநிலை. அவன் அவன்; வைதேன் வைதேன்; உண்டு உண்டு; போம் போம் என்பன முறையே விரைவும் துணிவும் உடன்பாடும்' ஒரு தொழில் டல்சால்நிகழ்தலும் ஆகிய பொருள் வேறுபாடுணர்த்தலின் பொருளொடு புணர்தலாம்.

அடுக்கு என்பது ஒரு சொல்லினது விகாரம் எனப்படும். அதனை இரண்டு சொல்லாகக் கொள்ளின் அஃது இரு பொருளுணர்த்துதல் வேண்டும். அவ்வாறுணர்த்தாமையின் அதனை ஒரு சொல்லெனவே கொள்ளுதல் வேண்டும்.

சகஉ. வேற்றுமைத் தொகையே யுவமத் தொகையே
வினையின் றொகையே பண்பின் றொகையே
உம்மைத் தொகையே யன்மொழித்
தொகையென்
றவ்வா றென்ப தொகைமொழி நிலையே.

இது தொகைச்சொற்களின் பெயரும் முறையும் தொகையும் கூறுகின்றது.

(இ-ள்) வேற்றுமைத்தொகை, உவமத்தொகை, வினைத் தொகை, பண்புத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித் தொகை எனத் தொகைச் சொற்கள் ஆறென்பர் ஆசிரியர். எ-று.

அறுவகைத் தொகைச் சொற்களின் இலக்கணம் உணர்த் துங்கால், வேற்றுமையுருபும் உவமவுருபும் உம்மையும் வினைச் சொல்லீறும் பண்புச் சொல்லீறும் தொகுதலின் தொகையாயின என்றும், அவ்வப்பொருள் மேல் ஒன்றும் பலவுமாகிய சொற்கள் பிளவு படாது ஒற்றுமைப்படத் தம்முள் இயைதலின் தொகை யாயின என்றும் உரையாசிரியர்கள் இருவேறு வகையாகப் பெயர்க் காரணங் கூறியுள்ளார்கள்.

'ஐம்பாலறியும் பண்புதொகு மொழியும்' எனவும் 'செய் யுஞ் செய்த வென்னுங் கிளவியின், மெய்யொருங்கியலுந் தொழில்தொகு மொழியும்' எனவும் 'உருபுதொகவருதலும்' என்வும் 'மெய்யுருபு தொகா விறுதியான' எனவும் 'பண்புதொக வருஉங் கிளவியானும்' எனவும் 'உம்மை தொக்க பெயர் வயினும்' எனவும் 'வேற்றுமை தொக்க பெயர் வயினும்' எனவும் 'உம்மையெஞ்சிய இருபெயர்த் தொகைமொழி' எனவும் தொகைச் சொற்களின் இடையே உருபு முதலியன தொக்கே (மறைந்தே) நிற்கும் என ஆசிரி யர் சூத்திரஞ் செய்தலின், வேற்றுமையுருபும், உவமவுருபும், உம்மும், வினைச்சொல்லீறும், பண்புணர்த்தும் ஈறும், இத் தொகைச் சொற்களின் புறத்தே இவையல்லாததோர் சொல் லும் தொக்குநிற்றலின் தொகைச் சொல்லாயின என்பதே அவர் கருத்தாயிற்று என நச்சினார்க்கினியர் தொகைமொழி பற்றிய தொல்காப்பியனார் கருத்தை நன்கு விளக்கியுள்ளார்.

''செய்தான் பொருள், இருந்தான் மாடத்து என உருபு தொக்கு ஒருசொல் நீர்மைப் படாதனவுந் தொகையாவான்

சேறலின் அவற்றை நீக்குதற்கும், வேழக்கரும்பு, கேழற்பன்றி என்புழித் தொக்கன இல்லையெனினும் தொகையென வேண்டப் படுமாகலான் அவற்றைத் தழுவுதற்கும், உருபு முதலாயின தொகுதலின் தொகையென்பார்க்கும் ஒட்டியொரு சொன்னீர் மைப்படுதலுந் தொகையிலக்கணமெனல் வேண்டும். அதனான் உருபு முதலாயின தொகுதல் எல்லாத் தொகையினுஞ் செல்லா மையான், எல்லாத்தொகைக் கண்ணுஞ் செல்லுமாறு ஒட்டி யொரு சொல்லாதல் தொகையிலக்கணமாய் முடிதலின் இவ் வாசிரியர்க்கு இதுவே துணிவெனப்படும்..... அதனான் உருபும் உவமையும் உம்மையுந் தொகுதலாவது, தம் பொருள் ஒட்டிய சொல்லால் தோன்றத் தாம் ஆண்டுப் புலப்படாதே நிற்றலே யாம்'' எனச் சேனாவரையர் பிளவுபடாது ஒன்றுபட்டிசைத் தலே தொகையிலக்கணமாம் என்னும் தம் கருத்தை நன்கு விளக்கியுள்ளார். வேற்றுமையுருபு முதலாயின இடையே மறைந்து நிற்றலேயன்றி இரண்டு முதலிய சொற்கள் ஒட்டி யொரு சொல்லாதலும் தொகையிலக்கணமாம் என்னும் இக் கருத்து 'எல்லாத் தொகையும் ஒரு சொன்னடைய'' (தொல்-எச்ச-24) எனவரும் சூத்திரத்தில் இடம் பெற்றுள்ளமை இங்கு நினைக்கத்தகுவதாகும்.

வேற்றுமைத்தொகை என்பது வேற்றுமையுருபு தொக்க தொகையெனவும், வேற்றுமைப் பொருளையுடைய தொகை எனவும் விரியும். உவமத்தொகை, உம்மைத்தொகை, அன் மொழித்தொகை என்பனவும் அவ்வாறு விரியும். அன்மொழி—அல்மொழி—தொக்கதல்லாத மொழி. வினைத்தொகை—வினை யினதுதொகை. பண்புத்தொகை—பண்பினது தொகை. ஈண்டு வினை பண்பு என்பன, அவற்றை யுணர்த்துஞ் சொற்களை.

தொகைச் சொல்லாவன இவையெனவுணர்த்தும் இச்சூத் திரத்தை அடியெற்றியமைந்தது,

361. வேற்றுமை வினைபண் புவமை யும்மை
அன்மொழி யெனவத் தொகையாறாகும்.

எனவரும் நன்னூற் சூத்திரமாகும்.

''வேற்றுமைத்தொகை முதல் அன்மொழித்தொகையீருகத் தொகைநிலைத் தொடர்மொழி ஆறு வகைப்படும்'' என்பது இதன் பொருள்.

சகங. அவற்றுள்,

வேற்றுமைத் தொகையே வேற்றுமை யியல.

இது வேற்றுமைத் தொகையாமாறு கூறுகின்றது.

(இ-ள்) வேற்றுமையுருபுகள் தொக்க தொகைச் சொல்லாவன அவ்வுருபுகள் விரிந்து நின்று பொருளுணர்த்திஞற் போலும் இயல்பினையுடையன. எ-று.

எனவே அவ்வியல்பில்லனவற்றின்கண் அவ்வுருபுகள் தொகா என்பதாம். ''சாத்தனெடு வந்தான் என்னும் பொருட்கண் சாத்தன் வந்தான் எனவும், சாத்தற்குக் கொடுத்தான் என்னும் பொருட்கண் சாத்தன் கொடுத்தான் எனவும் உருபுதொடர்ப் பொருளுணர்த்தும் ஆற்றல் இல்லன தொகா; அவ்வாற்றலுடையனவே தொகுவன என்ருர் சேனுவரையரும்.

இரண்டாம் வேற்றுமைத் தொகை முதலாக வேற்றுமைத் தொகை அறுவகைப்படும்.

(உ-ம்.) நிலங்கடந்தான், குழைக்காது எனவும்,
தாய் மூவர், பொற்குடம் எனவும்
கருப்பு வேலி, தாலிப்பொன் எனவும்
வரை பாய்தல், கருவூர்க் கிழக்கு எனவும்
மன்றப் பெண்ணை, மாரி மா எனவும் வரும்.

இவை முறையே நிலத்தைக் கடந்தான், குழையையுடைய காது; தாயொடு மூவர், பொன்னுன் இயன்ற குடம்; கரும்பிற்கு வேலி, தாலிக்குப் பொன்; வரையினின்றும் பாய்தல், கருவூரின் கிழக்கு; மன்றத்தின்கண் நிற்கும் பெண்ணை (பனை), மாரிக் கண் உளதாம் மா என உருபுகள் விரிந்து நின்ருல் தரும் பொருளைத் தொகையாய் நின்ற நிலையிலும் இனிது விளக்கிய வாறு காண்க.

இப்பொருளை விரித்துக் கூறும் முறையில் அமைந்தது,

362: இரண்டு முதலா மிடையா றுருபும்
வெளிப்பட லில்லது வேற்றுமைத் தொகையே.

எனவரும் நன்னூற் சூத்திரமாகும்.

''இரண்டாமுருபாகிய ஐ முதலாக வேற்றுமையுருபு ஆறும் இடையே தோன்றாது (அவற்றின் பொருள் தோன்ற) நிற்பது வேற்றுமைத் தொகையாம்'' என்பது இதன் பொருள்.

''ஆறுருபும் என்னும் முற்றும்மையை எச்சவும்மையாக்கி, 'பொற்குடம்' என ஒரோவழி உருபும் பொருளும் உடன் தொக்க தூஉம் வேற்றுமைத் தொகையெனக் கொள்க'' என்பர் சிவ ஞான முனிவர். பொற்குடம்—பொன்னாற் செய்த குடம் என விரியும்.

சகச. உவமத் தொகையே யுவம வியல.

இஃது உவமத் தொகையாமாறு கூறுகின்றது.

(இ-ள்) உவமத் தொகையாவது உவமவுருபுத் தொடர்ப் பொருள் போன்று பொருள் உணர்த்துவதாம். எ-று.

எனவே அப்பொருள் உணர்த்தும் ஆற்றலில்லாதன தொகா என்பதாம். புலியன்ன சாத்தன், மயிலன்ன மாதர் என்னும் உவம வுருபுத் தொடர்களை உருபு தொகுத்துப் புலிச் சாத்தன், மயின் மாதர் எனத் தொகையாக்கின் உவமப் பொருள் இனிது விளங்காமையின், இங்ஙனம் பொருள் விளக்கும் ஆற்றலில்லா தன தொகா; ஆற்றலுடையனவே தொகுவன என்பர் சேனா வரையர்.

(உ-ம்.) புலிப் பாய்த்துள்; மழை வண்கை;
துடி நடுவு; பொன்மேனி எனவரும்.

இத்தொகைச் சொற்கள் முறையே புலிப் பாய்த்துள் அன்ன பாய்த்துள்; மழையன்ன வண்கை; துடியன்ன நடுவு; பொன் னன்ன மேனி எனத் தம் விரியாக அமைந்த தொடர்களின் பொருளை உணர்த்தியவாறு காண்க.

புலிப்பாய்த்துள் முதலிய உவமத்தொகைகளை விரிக்குமிடத்துப் 'புலிப்பாய்த்துளை யொக்கும் பாய்த்துள்' என இரண்டாமுருபு விரித்துரைத்தலும் உண்டு. அங்ஙனம் உவமவுருபுடன் வேற்றுமையுருபினையும் விரித்துரைக்குமிடத்துத் தொகையினை விரிப்பார் கருத்துக்கேற்ப அத்தொடர் வேற்றுமைத் தொகையெனவும் உவமத்தொகையெனவும் இருதிறமாகக் கூறப்படும். இவ்வாறு உவமவுருபும் வேற்றுமையுருபும் என இரண்டுந் தொக்கனவேனும் புலிப்பாய்த்துள் என்னுந்தொகைக்கு உவமப் பொருளே சிறப்புடைத்தாகலின் உவமத்தொகை யென்றலே பொருத்த முடையதாம் என்பர் இளம்பூரணர்.

உவமத்தொகையின் இயல்பினை,

365. உவம வுருபில துவமத் தொகையே.

எனவருஞ் சூத்திரத்தாற் குறித்தார் நன்னூலார்.

''பண்பு, பயன், வினை, மெய் என்பன பற்றி வரும் உவமவுருபு தோன்றாதது உவமத்தொகையாம்'' என்பது இதன் பொருள்.

உவமவுருபுகளாவன இவையென விளக்கப் போந்த நன்னூலார்,

366. போலப் புரைய ஒப்ப உறழ
மானக் கடுப்ப இயைய ஏய்ப்ப
நேர நிகர அன்ன இன்ன
என்பவும் பிறவும் உவமத் துருபே.

எனவரும் சூத்திரத்தால் அவ்வுருபுகளிற் சிலவற்றை எடுத்தோதியுள்ளார்.

சகரு. வினையின் றொகுதி காலத்தியலும்.

இது வினைத்தொகையாமாறு கூறுகின்றது.

(இ-ள்) வினைச்சொல் தொகுங்கால் காலந்தோன்றத் தொகும் எ-று.

'காலத்தியலும்' என்றது, எக்காலுங் காலமுடையவாய் இயலும் என்றவாறு. காலம் எனப் பொது வகையாற் கூறியவத னல் மூன்று காலமுங் கொள்ளப்படும். 'தொகுதி காலத்தியலும்' எனவே விரிந்துநின்ற வழிப்போன்று தொக்கவழியும் தொகை யாற்றலாற் காலந்தோன்றும் என்றவாரும். ஈண்டு வினையென் றது, வினைச்சொற்கும் வினைப்பெயர்க்கும் முதனிலையாய், உண் தின் செல் கொல் என வினைமாத்திரம் உணர்த்தி நிற்பனவற்றை.

(உ-ம்) ஆடரங்கு; செய்குன்று; புணர்பொழுது; அரிவாள்; பொருகளிறு; செல்செலவு எனவரும்.

காலமுணர்த்தாது வினைமாத்திர முணர்த்தும் வினைப்பகுதி யாகிய இப்பெயர்கள், நிலமுதலாகிய பெயரொடு தொக்குழிப் பெயரெச்சப் பொருளவாய் நின்று காலம் உணர்த்தும் என்பர் சேனவரையர். செய்யும் செய்த என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சங்களுள் காலமுணர்த்தும் இடைநிலையும் பெயரெச்ச விகுதியுமாகிய இடைச்சொற்கள் மறைந்து நிற்க வினைப்பகுதி கள் மட்டும் நிலமுதலாகிய அறுவகைப் பெயரொடு ஒட்டி நிற்கும் தொகைச்சொல் வினைத்தொகையாம் என்பது,

''செய்யுஞ் செய்த வென்னுங் கிளவியின்
மெய்யொருங் கியலுந் தொழில்தொகு மொழியும்''
(தொல்-எழுத்து-482)

எனத் தொல்காப்பியர் கூறுதலால், பெயரெச்சம் நின்று தொக்கதே வினைத்தொகை என்பது ஆசிரியர் கருத்தாதல் இனிது புலனும். இக்கருத்தினை அடியொற்றியதே,

363. காலங் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை.

எனவரும் நன்னூற் சூத்திரமாகும்.

''காலங்கள் தோன்றாது தன் எச்சமான பெயர் கொண்டு நிற்கும் பெயரெச்சம் வினைத்தொகையாம்'' என்பது இதன் பொருள்.

இங்குக் காலம் என்றது, முக்காலத்தையும் தோற்றுவிக் கும் இடைநிலைகளை. 'பொருகளிறு' என்னும் வினைத்தொகை

விரிவுழி, பொருதகளிறு, பொரா நின்ற களிறு, பொருங் களிறு என விரியும். பிறவும் அன்ன.

சகசு. வண்ணத்தின் வடிவின் அளவிற் சுவையினென்
றன்ன பிறவும் அதன்குண நுதலி
இன்ன திதுவென வரூஉ மியற்கை
என்ன கிளவியும் பண்பின் றொகையே.

இது, பண்புத்தொகை யாமாறு கூறுகின்றது.

(இ-ள்) வண்ணம், வடிவு, அளவு, சுவை என்பவற்றினும் அத்தன்மைய பிறவற்றினும் ஆகி, ஒரு பொருளினது குணத்தைக் கருதி 'இத்தன்மையது இப்பொருள்' என ஒன்றை ஒன்று விசேடித்து வரும் இயல்பிணையுடைய எவ்வகைத் தொடர் மொழியும் பண்புத்தொகையாம். எ-று.

(உ-ம்). கருங்குதிரை என்பது வண்ணப் பண்பு.
வட்டப்பலகை என்பது வடிவப் பண்பு.
நெடுங்கோல் என்பது அளவு.
தீங்கரும்பு என்பது சுவை.

இவை விரியுங்கால், கரிதாகியது குதிரை, வட்டமாகியது பலகை, நெடியது கோல், தீவியது கரும்பு என விரியும். இத்தொகைமொழிக்கணுள்ள இருசொல்லும் ஒருபொருளவாய் 'இன்னது இது' என ஒன்றையொன்று பொதுமை நீக்கிய வாறு காண்க.

உயர்திணை அஃறிணை என்னும் அவ்விருதிணைக் கண்ணும் உள்வாகிய ஒருவன் ஒருத்தி பலர் ஒன்று பல என்னும் ஐந்து பாலினையும் அறிதற்குக் காரணமாகிய பண்புகொள்பெயரொடு தொகும் தொகைச் சொல் பண்புத்தொகையாம் என்பதனை,

"உயர்திணை யஃறிணை யாயிரு மருங்கின்
ஐம்பாலறியும் பண்புதொகு மொழியும்"
(தொல்-குற்றியலுகரம்-77)

என எழுத்ததிகாரத்தில் ஆசிரியர் விளங்கக் கூறியுள்ளார். பண்புத்தொகையிற் பண்புகொள் பெயரின் ஈற்றிலுள்ள ஐம் பாலீறுகள் தொக்கு நின்றே விரியும் என்பது உணர்த்துதற்கு

அம்மொழியமைப்பு விளங்க ''இன்னது இது'' என அடை மொழி புணர்த்துக் கூறினர். எனவே கரும் பார்ப்பான், கரும் பார்ப்பனி, கரும் பார்ப்பார், கருங்குதிரை, கருங்குதிரைகள் எனப் பண்புணர்த்தும் ஈறுகள் தொக்கனவற்றை விரிப்புழிக் கரியனாகிய பார்ப்பான், கரியளாகிய பார்ப்பனி, கரியராகிய பார்ப்பார், கரியதாகிய குதிரை, கரியனவாகிய குதிரைகள் என இவ்வாறு ஐம்பாலீறுகளையும் விரித்துரைப்பர், இளம்பூரணர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையர் ஆகிய உரையாசிரியர்கள்.

கரியன், செய்யன், கருமை, செம்மை என்பனவற்றிற் கெல்லாம் முதனிலையாய்ச் சொல் நிரம்பாது 'கரு' 'செவ்' எனப் பண்பு மாத்திரம் உணர்த்திநிற்கும் பண்புச்சொற்கள் பெயருடன் தொக்குப் பண்புடைப் பொருளாகிய பண்பியினையே குறித்தலால் இரு சொல்லும் ஒரு பொருளவாய் 'இன்னது இது' என ஒன்றையொன்று பொதுமை நீக்கிவரும் என்பர் சேனாவரையர்.

'இன்னது இதுவென வரூஉம் இயற்கை என்ன கிளவியும் பண்பின் தொகையே' என ஆசிரியர் குறித்தமையால் பண்பு தொகாது இன்னது இதுவெனப்பட வேழக்கரும்பு, கேழற் பன்றி, சாரைப்பாம்பு எனப் பெயர் தொக்கனவும் பண்புத் தொகையாதல் கொள்ளப்படும்.

குணப் பெயரொடு குணிப்பெயர் புணருங்கால் அக்குணி யோடு குணத்துக்கு உண்டாகிய ஒற்றுமையினை விளக்குதற்கு வரும் 'ஆகிய' என்னும் மொழியாகிய பண்புருபு தொக்கு நிற்பனவும், அப்பண்புருபு தொக்கு நிற்பப் பொதுப்பெயரும் சிறப்புப் பெயருமாய் ஒருபொருட்கு இருபெயர் ஒட்டிநிற்பன வும் ஆகிய இவ்விரண்டும் பண்புத்தொகையாம் என்பர் பவணந்தி முனிவர்.

364. பண்பை விளக்கு மொழிதொக் கனவும்
ஒருபொருட் கிருபெயர் வந்தவுங் குணத்தொகை.

என்பது நன்னூல்.

''பொருளின்கண் அமைந்த குணத்தைக் காட்டுதற்கு ஆண்டுவரும் பண்புருபு தொக்கு நிற்பனவும், ஒருபொருட்கு

உரியனவாய் இருபெயர்கள் ஒட்டி நிற்பனவும் பண்புத்தொகை யாம்'' என்பது இதன் பொருள்.

குணம்—பண்பு. குணத்தொகை—பண்புத்தொகை. குணத் தொகையென்றமையான் ஒரு பொருட்கு இருபெயர் வந்தன வற்றின் கண்ணும் பண்புருபு தொகும் என்பது பெற்றும்.

செந்தாமரை என்பது, செம்மையாகிய தாமரை என விரியும். இது, செம்மை என்னும் குணப்பெயரும் தாமரை யென்னும் குணிப்பெயரும் ஒட்டி நின்ற பண்புத்தொகையாகும். 'ஆயன் சாத்தன்', 'வேழக்கரும்பு' என்பன பொதுவும் சிறப்பு மாய் 'ஆகிய' என்னும் பண்புருபு இடையில் மறைந்து நிற்க ஒரு பொருட்கு இருபெயராய் ஒட்டி நிற்பன இருபெயரொட்டுப் பண்புத்தொகை யெனப்படும்.

சகள. இருபெயர் பலபெயர் அளவின் பெயரே
எண்ணியற் பெயரே நிறைப்பெயர்க் கிளவி
எண்ணின் பெயரோ டவ்வறு கிளவியுங்
கண்ணிய நிலைத்தே யும்மைத் தொகையே.

இஃது உம்மைத் தொகையாமாறு கூறுகின்றது.

(இ-ள்) இருபெயர், பலபெயர், அளவுப்பெயர், எண்ணியற் பெயர், நிறைப்பெயர், எண்ணுப்பெயர் என அறுவகைப்பட்ட சொல்லையும் கருதி எண்ணும் நிலையினது (எண்ணிடைச் சொல் லாகிய உம்மை தொக்கு நின்ற) உம்மைத் தொகையாம். எ-று.

'எண்ணின்கண்வரும் இடைச்சொற்கள் பலவேனும் தொக்கு நிற்கும் ஆற்றலுடையது உம்மைப்பெயராகலான் உம்மைத்தொகையாயிற்று' என்பர் சேனவரையர். வேற்று மைத் தொகை முதலாயின பலசொல்லாற் றெருகுதல் சிறு பான்மை; அதனல் உம்மைத்தொகை இருசொல்லாலும் பல சொல்லாலும் தொகும் என்பதற்கு 'இருபெயர் பலபெயர்' என்றூர்.

(உ-ம்) இருபெயர்:- உவாப் பதினன்கு; உவாவும் பதினன்கும் என விரியும்.

பலபெயர்:- புலி ற் கெண்டை; புலியும் வில்லும் கெண்டையும் என விரியும்.

அளவின் பெயர்:- தூணிப் பதக்கு; தூணியும் பதக்கும் என விரியும்.

எண்ணியற்பெயர்:- முப்பத்து மூவர்; முப்பதின்மரும் மூவரும் என விரியும்.

நிறைப்பெயர்:- தொடியரை; தொடியும் அரையும் என விரியும். தொடி என்பது, பலம் என்னும் நிறையினைக் குறித்த பெயர்.

எண்ணின்பெயர்:- பதினொன்று; பத்தும் ஒன்றும் என விரியும்.

367. எண்ண லெடுத்தன் முகத்த னீட்டல்
எனுநான் களவையு ளும்மில தத்தொகை.

எனவரும் நன்னூற்சூத்திரம் உம்மைத்தொகையின் இலக்கணங் கூறுவதாகும்.

''எண்ணியும் எடுத்தும் முகந்தும் நீட்டியும் அளக்கப்படும் நால்வகை அளவையின் கண்ணும் எண்ணுதற்பொருளில் வரும் உம்மை தொக்கு நிற்பது உம்மைத் தொகையாம்'' என்பது இதன் பொருள்.

உம்மைத்தொகைக்கு இலக்கணங் கூறு முகத்தானே அத்தொகை பற்றிவரும் அளவைகளையும் எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என நால்வகைப் படுத்துணர்த்திய பவணந்தியாரது மொழித்திறம் அறிந்து மகிழத்தகுவதாகும்.

சகஅ. பண்பு தொகவரூஉங் கிளவி யானும்
உம்மை தொக்க பெயர்வயி னானும்
வேற்றுமை தொக்க பெயர்வயி னானும்
ஈற்றுநின் றியலும் அன்மொழித் தொகையே.

இஃது அன்மொழித் தொகையாமாறு கூறுகின்றது.

(இ ள்) பண்புச் சொல் தொக வரும் தொகையின் கண்ணும் உம்மை தொக்க பெயர்க்கண்ணும் வேற்றுமை தொக்க பெயர்க்கண்ணும் இறுதிச் சொற்கண் நின்று நடப்பது அன்மொழித் தொகையாம். எ-று.

"பண்புத்தொகை படவும் உம்மைத்தொகை படவும் வேற்றுமைத்தொகை படவும் அச்சொல் தொக்கபின்பு அத்தொகை அன்மொழித்தொகை யாகாமையின், பண்புத்தொகை முதலியனவாக அச்சொற்கள் தொகுவதன்முன் அவற்றிற்கு நிலைக்களனாகிய சொற்பற்றி வருவது அன்மொழித்தொகை என்பது விளக்குவார், 'பண்பு தொக வருஉங் கிளவியானும் உம்மைதொக்க பெயர் வயினானும், வேற்றுமைத்தொக்க பெயர் வயினானும்' என ஆசிரியர் விரித்துக்கூறினார்" என்பர் சேனாவரையர்.

நின்ற சொல்முன் வருஞ்சொல்லாகி வெளிப்பட நிற்பது அல்லாத மொழியொன்று, வேற்றுமைத்தொகை முதலிய தொகை நிலைத் தொடர்மொழிகளின் ஆற்றலால் அத்தொகை மொழிகளின் புறத்தே மறைந்து நிற்றலின் இத்தொகைக்கு அன்மொழித் தொகையென்பது பெயராயிற்று.

இச் சூத்திரத்தின்கண் சிறப்புடைய வேற்றுமைத் தொகையை முற்கூறாத முறையன்றிக் கூற்றினால், சொல்லாதொழிந்த உவமத்தொகையும் வினைத்தொகையும் பற்றி அன்மொழித் தொகை தோன்றும் எனக்கொள்வார் இளம்பூரணர்.

"வினையின் றொகையினும் உவமத் தொகையினும்
அன்மொழி தோன்றும் என்மனார் புலவர்"

என்றார் அவிநயனாரும்.

இவ்வாறு தொல்காப்பியர் குறித்த பண்புத்தொகை, உம்மைத்தொகை, வேற்றுமைத்தொகை ஆகிய மூன்றுடன் உரையாசிரியர் குறித்த உவமத்தொகையும் வினைத்தொகையும் சேர்ந்த ஐவகைத் தொகைச் சொற்களின் புறத்தே அவையல்லாத பிறசொற்கள் மறைந்துநிற்க வருவது அன்மொழித் தொகையாம் என்பார்,

368. ஐந்தொகை மொழிமேற் பிறதொகல் அன்மொழி.

என்றார் பவணந்தியார்.

''வேற்றுமை முதலான ஐவகையுருபுகளும் தொக்கு நின்ற மொழிகளின் புறத்தே அவற்றின் பொருள்களைத் தழுவிய பிற சொற்கள் மறைந்து நிற்க வருவது அன்மொழித் தொகையாம்'' என்பது இதன்பொருளாகும்.

பண்புத்தொகைப்பட அமைந்த 'வெள்ளாடை' என்னுஞ் சொல்லைப் படுத்தலோசையாற் கூறிய வழி 'வெண்மையான ஆடையினை யுடுத்தாள்' எனப் புறத்தே ஒருசொல் தொக்கு நிற்றலின், இது பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன் மொழித் தொகையாகும். உம்மைத் தொகைபட அமைந்த 'தகர ஞாழல்' என்பது 'தகரமும் ஞாழலும் விரவியமைந்த சாந்து' எனப் புறத்தே பிறசொல் தொக்கு நிற்றலின், உம்மைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தெ கை யாகும். வேற்றுமைத் தொகைபட அமைந்த 'பொற்றாலி' என்பது 'பொன்னாலாகிய தாலியினை அணிந்தாள்' என ஒரு சொல் தொக்கு நிற்றலின் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகும். உவமத்தொகைபட அமைந்த 'அறற் கூந்தல்' என்பது, 'அறல் போலும் கூந்தலை யுடையாள்' எனப் புறத்தே ஒருசொல் தொக்குநிற்றலின் உவமத் தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித் தொகையா கும். வினைத்தொகைபட அமைந்த 'திரிதாடி' என்பது 'திரிந்த தாடியினையுடையான்' என ஒருசொல் புறத்தே மறைந்து நிற்றலின் வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன் மொழித்தொகையாகும்.

சகக. அவைதாம்
முன்மொழி நிலையலும் பின்மொழி நிலையலும்
இருமொழி மேலும் ஒருங்குட னிலையலும்
அம்மொழி நிலையா தன்மொழி நிலையலும்
அந்நான் கென்ப பொருணிலை மரபே.

இது, தொகைச் சொற்களிற் பொருள் நிற்கும் இடங்கள் இத் துணையவெனக் கூறுகின்றது.

(இ-ள்) முன் மொழியில் நிற்றலும், பின்மொழியில் நிற்ற லும், இரு மொழியிலும் நிற்றலும், அவற்றின்மேல் நில்லாது

புறமொழி மேல் நிற்றலும் எனத்தொகைச் சொற்களின் பொருள் நிற்கும் மரபு அந்நான்காம் என்று கூறுவர் ஆசிரியர். எ-று.

ஈண்டுப் பொருள்நிலை என்றது, வினைகொண்டு முடியுமாற்றால் அச்சொல்லின் பொருள் மேற்பட்டுத் தோன்றுதலாகும்.

(உ-ம்) 'வேங்கைப்பூ' என்புழி முன்மொழிக்கண் பொருள் சிறந்து நின்றது. அது 'நறிது' என்னும் வினையோடு இயையுமாற்றால் மேற்பட்டுத் தோன்றியவாறு காண்க. இஃது இடவகையான் முன்மொழியாயிற்று. 'அடைகடல்' என்புழி அடையென்னும் பின்மொழிக்கண் பொருள் நின்றது. கடலுங் கடலடைந்த இடமும் கடலெனப்படுதலின், அடை கடல் என்பது அடையாகிய கடல் என இருபெயர்ப் பண்புத்தொகை. 'உவாப்பதினான்கு' என்புழி இருமொழிக் கண்ணும் பொருள் சிறந்து நின்றது. 'வெள்ளாடை' என்புழித் தொக்க இருமொழி மேலும் நில்லாது 'உடுத்தாள்' என்னும் அன்மொழிமேல் நின்றது.

''வேற்றுமைத் தொகை முதல் நான்கு தொகையும் முன் மொழிப் பொருள; வேற்றுமைத்தொகையும் பண்புத்தொகையும் சிறுபான்மை பின் மொழிப் பொருளவும் ஆம். உம்மைத் தொகை இருமொழிப் பொருட்டு'' என்பர் சேனாவரையர்.

இச் சூத்திரப் பொருளைச் சுருங்க விளக்குவது,

369. முன்மொழி பின்மொழி பன்மொழி புறமொழி
எனநான் கிடத்துஞ் சிறக்குந் தொகைப்பொருள்.

எனவரும் நன்னூற் சூத்திரமாகும்.

''தொகை நிலைத் தொடர் மொழிகளின் முன்மொழியிலும் பின்மொழியிலும் அனைத்து மொழியாகிய பன்மொழிகளிலும் அவையல்லாத புறமொழியிலும் என இந்நான்கிடங்களிலும் தொகைநிலைத் தொடர்ப்பொருள் சிறந்துநிற்கும் என்பது இதன் பொருள்.

உதாரண ம் முன்னர்க்காட்டியனவே.

௩௫௯. எல்லாத் தொகையும் ஒருசொன் னடைய.

இது தொகைச் சொற்கெல்லாம் உரியதோர் இலக்கணம் உணர்த்துகின்றது.

(இ-ள்) அறுவகைத் தொகைச் சொல்லும் ஒருமொழி போல் நடப்பன. எ-று.

''ஒரு சொல் நடைய' எனப் பொதுப்படக் கூறிய அதனுன், யானைக்கோடு, கொல்யானை என முன்மொழி பெயராகிய வழி ஒரு பெயர்ச்சொல் நடையவாதலும், நிலங்கடந்தான், குன்றத் திருந்தான் என முன்மொழி வினையாயவழி ஒரு வினைச்சொல் நடையவாதலும் கொள்க. அவை உருபேற்றலும் பயனிலை கோடலும் முதலாகிய பெயர்த்தன்மையும், பயனிலையாதலும் பெயர்கோடலு முதலாகிய வினைத்தன்மையும் உடையவாதல் அவ்வச் சொல்லோடு கூட்டிக் கண்டு கொள்க'' எனவும், ''நிலங்கடந்தான், குன்றிருந்தான் என வேற்றுமையுருபு தொகப் பெயருந்தொழிலும் ஒருங்கிசைத்தல் ஆசிரியர் நேர்ந் தாராகலின் அவை தொகையெனவேபடும்'' எனவும், கடந் தானிலம், இருந்தான் குன்றத்து என்பன ஒருங்கிசையாது பக்கு (பிளவுபட்டு) இசைத்தலின், அவை தொகையன்மை யறிக,'' எனவும் விளக்கங் கூறுவர் சேனவரையர்.

(உ-ம்) யானைக்கோடு கிடந்தது; துடியிடை நன்று; கொல்யானை ஓடிற்று; கருங்குதிரை வந்தது, கழஞ்சரை நிறைந்தது, பொற்றொடி வந்தாள் என எழுவாயும் பயனிலை யுமாகியும், யானைக்கோட்டை, துடியிடையை, கொல் யானையை, கருங்குதிரையை, கழஞ்சரையை, பொற்றொடியை என உருபேற்றும் வெற்றுமை முதலிய அறுவகைத்தொகையும் ஒருசொல் நடையவாகி வந்தவாறு காண்க.

தொகைச் சொற்குரிய இவ்விலக்கணத்தினை விரித்துக் கூறும் முறையில் அமைந்தது,

360. பெயரொடு பெயரும் வினையும் வேற்றுமை
முதலிய பொருளி னவற்றி னுருபிடை

ஒழிய விரண்டு முதலாத் தொடர்ந்தொரு
மொழிபோல் நடப்பன தொகைநிலைத்
தொடர்மொழி.

எனவரும் நன்னூற் சூத்திரமாகும்.

''பெயர்ச் சொல்லோடு பெயர்ச் சொல்லும், பெயர்ச்சொல்லோடு வினைச்சொல்லும், வேற்றுமை வினை பண்பு என்பன முதலாக வகுத்துக் கூறப்படும் அறுவகைப் பொருட் புணர்ச்சிக் கண், அவற்றின் உருபுகள் இடையே மறைந்துநிற்ப, இரண்டு முதலிய பல சொற்கள் தொடர்ந்து ஒரு மொழிபோல் நடப்பன தொகைநிலைத் தொடர்மொழிகளாம்'' என்பது இதன் பொருள்.

வினையொடு வினை தொகைநிலைத் தொடர் ஆகாமையின் அதனை ஒழித்தும், 'நிலத்தைக் கடந்தான்' என உருபுவிரியின் பிளவுபட்டு வேறாகப் பிரிந்தும், நிலங்கடந்தான் என உருபு தொக்கதேல் பிளவுபடாது ஒரு சொல்லாகியும் தொடருமாதலின், 'இரண்டு முதலாத் தொடர்ந்து ஒருமொழிபோல் நடப்பன'வென்றும் கூறினர். 'ஒரு மொழிபோல் நடப்பன தொகை நிலைத் தொடர்மொழி' என்னும் நன்னூற் சூத்திரத்தொடர், 'எல்லாத் தொகையும் ஒரு சொல் நடைய' என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தை அவ்வாறே சொற்பொருள்திறத்தால் ஒத்தமைந்திருத்தல் உளங்கொளத்தருவதாகும்.

சஉக. உயர்திணை மருங்கின் உம்மைத் தொகையே
பலர்சொல் னடைத்தென மொழிமனார் புலவர்.

இஃது உயர்திணை உம்மைத்தொகைக்கு எய்தாதது எய்துவிக்கின்றது.

(இ-ள்) உயர்திணைப் பெயரிடத்துத் தொக்க உம்மைத் தொகை பலர்பால் ஈற்றினதாய்ப் பன்மையுணர்த்திநிற்கும் என்பர் ஆசிரியர். எ-று.

(உ-ம்) மாமூல பெருந்தலைச் சாத்தர்; கபில பரண நக்கீரர் எனவரும்.

'பலர்சொல் நடைத்து' என்றது, எண்ணப்பட்டார் பலர் மேலும் விணேயேற்கும் வண்ணம் தமக்குரிய ஒருமைப்பாலீறு கெட்டுப் பலர்பாற்குரிய ஈற்றினதாகத்திரிதலே. இச்சூத்திரப் பொருளேச் சுருங்க விளக்குவது,

371. உயர்திணை யும்மைத் தொகைபல ரீறே.

எனவரும் நன்னூற் சூத்திரமாகும்.

சஉஉ. வாரா மரபின வரக்கூ றுதலும்
என்னு மரபின வெனக்கூ றுதலும்
அன்னவை யெல்லாம் அவற்றவற் றியல்பான்
இன்ன வென்னுங் குறிப்புரையாகும்.

இஃது உலகியலில் வழங்கும் ஒருசார் தொடர்மொழிகள் பற்றிய வழுவமைக்கின்றது.

(இ-ள்) வாராத இயல்புடையவற்றை வருவனவாகச் சொல்லுதலும், என்று கூருத இயல்புடையவற்றைக் கூறுவன வாகச் சொல்லுதலும் அத்தன்மையன எல்லாம் அவ்வப்பொரு ளின் இயல்பால் இத்தன்மையன என்று சொல்லுங் குறிப்பு மொழிகளாம். எ-று.

(உ-ம்) 'அவ்வழி இங்கு வந்து சேர்ந்தது', 'அம்மலே வந்து இதனேடு பொருந்திற்று' எனவும், 'அவல் அவல் என் கின்றன நெல்', 'மழை மழையென்கின்றன பயிர்' எனவும் வரும் இவை, வருதலேயும் சொல்லுதலேயும் உணர்த்தாது 'இத்தன்மை யன' என்பதனேக் குறிப்பால் உணர்த்தியவாறு காண்க.

தொல்காப்பியனுர் குறித்த இம்மொழி வழக்கினே யடியொற் றிக் கேட்டல், கிளத்தல், இயங்கல், இயற்றுதல் என்னும் இத் தொழிற்றிறமில்லாத அஃறிணேப் பொருளே அத்தொழில் நிகழ்த்துவனபோலக் கூறும் சொன்முறையினே எடுத் துரைப்பது,

408. கேட்குந போலவுங் கிளக்குந போலவும்
இயங்குந போலவும் இயற்றுந போலவும்
அஃறிணை மருங்கினும் அறையப் படுமே.

எனவரும் நன்னூற் சூத்திரமாகும்.